# காலாண்டுத் தேர்வு - 2023

வகுப்பு : 9
காலம் : 3.00 மணி

## தமிழ்

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15x1=15

1. "காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! – எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!"
இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்
அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

2. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது ?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

3. ஈரோடு தமிழன்பனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ..........................................
அ) தமிழ் விடு தூது ஆ) பெரியபுராணம் இ) வணக்கம் வள்ளுவ ஈ) திருவள்ளுவ மாலை

4. தமிழ் விடு தூது .............................. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

5. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது ?
அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

6. 'தண்ணீர்' – சிறுகதையின் ஆசிரியர் ....................................
அ) கவிஞர் தமிழ்ஒளி ஆ) கந்தர்வன்
இ) ஈரோடு தமிழன்பன் ஈ) ஜெயகாந்தன்

7. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.
1. நீரின்று அமையாது உலகு – திருவள்ளுவர்.
2. நீரின்று அமையாது யாக்கை – ஔவையார்.
3. மாமழை போற்றுதும் – இளங்கோவடிகள்
அ) 1, 3 ஆ) 2,3 இ) 1,2 ஈ) 1,2,3

8. பொருந்தாத இணை எது ?
அ) ஏறுகோள் – எருதுகட்டி ஆ) திருவாரூர் – கரிக்கையூர்
இ) ஆதிச்ச நல்லூர் – அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் – பட்டி மண்டபம்

9. சொற்றொடர்களை முறைப்படுத்துக.
1) ஏறுதழுவுதல் என்பதை 2) தமிழ் அகராதி
3) தழுவிப் பிடித்தல் என்கிறது.
அ) 2,1,3 ஆ) 2,3.1 இ) 3,2,1 ஈ) 3,1,2

10. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் ..........................................
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்



m poovarasan

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

11. தீரா இடும்பை தருவது எது ?
அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம் இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

"தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்"

12. இப்பாடல் அடி இடம்பெற்ற நூல் எது ?
அ) புறநானூறு ஆ) பெரியபுராணம் இ) தமிழ்விடுதூது ஈ) மணிமேகலை
13. முத்தியைத் தருவது எது ?
ஆ) தருமம் ஆ) இறைவன் இ) தமிழ் ஈ) வினை
14. முத்தமிழ் – பிரித்து எழுதுக.
அ) முத்+தமிழ் ஆ) முத்து+தமிழ் இ) மூன்று+தமிழ் ஈ) முத்து+அமிழ்
15. முத்திக்கனி – இலக்கணக் குறிப்பு தருக.
அ) உவமை ஆ) வேற்றுமைத் தொகை இ) உருவகம் ஈ) உம்மைத்தொகை

## பகுதி – II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 4x2=8
**21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.
ஆ) திராவிட மொழிகள் மொத்தம் 28 ஆகும்.
17. கண்ணி என்பதன் விளக்கம் யாது ?
18. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது ?
19. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது ?
20. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும் ?
21. "மிகுதியான்" – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** 5x2=10

22. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.
23. உணர்ந்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
24. பழமொழிகளைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.
அ) நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல
ஆ) தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்.
25. அகராதியில் காண்க.
அ) நயவாமை ஆ) கம்புள்
26. தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.
அ) சித்திரமும் கைப்பழக்கம் ..............................
ஆ) கற்றோர்க்குச் சென்ற ..............................
27. கலைச்சொல் அறிவோம்
அ) Download ஆ) Phoneme
28. பொருள் எழுதித் தொடரமைக்க.
கரை – கறை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2x3=6

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது ?

30. சோழர் காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது ?

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மேலை நாடுகளில் குறிப்பாக தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில், காளையைக் கொன்று அடக்குபவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு, மேலைநாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துகிறது.

1. ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு யாது ?
2. யார் வீரனாகக் கருதப்படுவான் ?
3. வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது எது ?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

**34 வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை ?

33. "பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34. அ) "நீர் இன்று அமையா" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடி மாறாமல் எழுதுக.

(அல்லது)

ஆ) "அறிவியல் என்னும்" எனத் தொடங்கும் – ஓ, என் சமகாலத் தோழர்களே ! – பாடலை அடிமாறாமல் எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2x3=6

35. பார், இரு, கொடு – ஆகிய வினையடிகளை முதல்வினையாகவும் துணைவினையாகவும் அமைத்துத் தொடர்களை உருவாக்குக.

36. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை – இக்குறளில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

37. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5x5=25

38. தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

39. உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின், 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)


பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

40. காட்சியைக் கண்டு
கவினுற கவிதை ஒன்றை எழுதுக.



41. நிற்க அதற்குத் தக .........................
நான் பாராட்டுப் பெற்ற சூழல்கள்
அ) கூடுதலாக மீதம் கொடுத்த கடைக்காரரிடம் அந்தப் பணத்தை மீண்டும் அளித்த போது
ஆ) ..........................................................................................
இ) ..........................................................................................
ஈ) ..........................................................................................
உ) ..........................................................................................
ஊ) ..........................................................................................

42. அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.
அ) இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ............................ (திகழ்)
ஆ) வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ................................ (கலந்து கொள்)
இ) உலகில் மூவாயிரம் மொழிகள் .......................... (பேசு)
ஈ) குழந்தைகள் அனைவரும் சுற்றுலா .......................... (செல்)
உ) தவறுகளைத் ........................... (திருத்து)

(அல்லது)

ஆ) மொழி பெயர்க்க.
1) Every flower is a soul blossoming in nature - gerard de nerval.
2) An early morning walk is a blessing for the whole day - Henry david thoreau.
3) The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru.
4) The biggest problem is the lack of love and charity - Mother Teresa.
5) You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam.

## பகுதி – V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்** 3x8=24

43. அ) நீரின்று அமையாது உலகு – என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரிக்க. (அல்லது)
ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக. (அல்லது)
ஆ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
அ) முன்னுரை – மழை நீரின் முக்கியத்துவம் – மழைநீர் சேகரிப்பின் அவசியம் – மழைநீர் சேகரிப்பு முறைகள் மழைநீர் பாதுகாப்பு – முடிவுரை. (அல்லது)
ஆ) முன்னுரை – கொரோனா பரவும் விதம் – அறிகுறிகள் – தடுக்கும் முறைகள் – கொரோனாவின் பாதிப்புகள் – கொரோனா காலத்தில் தமிழகம் – முடிவுரை.

--------



Kindly send me your study materials to padasalai.net@gmail.com